



## சென்னை துறைமுகம் பகுதியில் 4,000 இஸ்லாமிய மக்களுக்கு நல உதவிகள்:

# கழகத்துக்கும் இஸ்லாமிய மக்களுக்குமான தொடர்பு காயிதே மில்லத் காலம் தொட்டு தொடர்ந்து வருகிறது!

## சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற்ற விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

*சென்னை, மார்ச் 5-*

**சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், துறைமுகம் பகுதியில் 4,000 இஸ்லாமிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வாழ்த்துரையாற்றினார்.**

**அப்போது அவர், ``கழகத்துக்கும் இஸ்லாமிய மக்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. கண்ணியமிகு காயிதே மில்லத் காலத்திலிருந்தே இந்த பந்தம் தொடர்ந்து வருகிறது. அதனால்தான் அந்த மகிழ்ச்சியோடும், உரிமையோடும் உங்களையெல்லாம் சந்திக்க வருகை தந்துள்ளேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பாதையில், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் ஏராளமான திட்டங்களை இஸ்லாமிய சமுதாய மக்களுக்குத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார்கள்” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:-**

இன்றைக்கு இந்த சென்னை கிழக்கு மாவட்டத்தில் நடைபெறுகின்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

முதலில் இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய அண்ணன் சேகர் பாபு அவர்களுக்கு என் அன்பையும் பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணன் சேகர் பாபு அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு என்னை அழைத்திருக்கிறார்கள். எப்பொழுதுமே என்னை அழைப்பார்கள். இன்னும் சொல்லப்போனால், இந்தத் திடலிலேயே நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளில் கடந்த ஏழு எட்டு வருடங்களாக நான் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருக்கிறேன். அது தீபாவளி திருநாளாக இருக்கும், பொங்கல் திருநாளாக இருக்கும், கிறிஸ்துமஸ் திருநாளாக இருக்கும். அந்த வகையில் இன்றைக்கு ரம்ஜான் திருநாளுக்கு அழைத்திருக்கிறார். நிகழ்ச்சியை அண்ணன் சேகர்பாபு அவர்கள் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார்கள்.

முன்பெல்லாம் மாதம் ஒருமுறை என்னை அழைப்பார். அதன்பிறகு, அது அதிகரித்து 10 நாள்களுக்கு ஒருமுறை அழைக்கத் தொடங்கினார். அதன் பிறகு, இப்போது தினமும் ஒருமுறை என்னை இந்த கிழக்கு மாவட்டத்துக்கு ஏதாவது ஒரு நிகழ்ச்சியைச் சொல்லி அழைத்து வந்துவிடுவார்.

### வடசென்னையில் பல நிகழ்ச்சிகள்

இன்று மட்டும் காலையிலிருந்து பல நிகழ்ச்சியில் இந்த கிழக்கு மாவட்டத்தில் கலந்துகொண்டு மதியநேரத்தில் ஒரு மணிநேரம் இடைவேளை விட்டுவிட்டு, இன்று மாலை மீண்டும் இந்த ரமலான் நிகழ்ச்சியில் உங்களையெல்லாம் சந்திப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இவ்வாறு வடசென்னையில் பல்வேறு நிகழ்ச்சிகள் இன்று நடைபெற்றுள்ளன. பல புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளோம். இவ்வாறு அடுக்கடுக்கான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ள அண்ணன் சேகர்பாபு அவர்களை, நம்முடைய தலைவர் அவர்கள் எப்பொழுதும் ‘செயல்பாபு’ என்றுதான் பாராட்டி குறிப்பிடுவார்.

அண்ணன் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறையின் அமைச்சர். ஆனால், ரமலான் விழாவாக இருக்கட்டும், கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியாக இருக்கட்டும், அனைத்தையும் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து, மக்கள் நலன் பெற அதைச் செய்து, என்றென்றும் மக்களுடன் மக்களாக இருப்பவர்தான் அண்ணன் சேகர்பாபு அவர்கள்.

### காயிதே மில்லத் கால பந்தம்

இன்று இவ்வளவு இஸ்லாமியப் பெருமக்கள் இங்கே வருகை தந்துள்ளீர்கள். உங்களையெல்லாம் பார்க்கும்போது மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், கழகத்துக்கும் இஸ்லாமிய மக்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. கண்ணியமிகு காயிதே மில்லத் காலத்திலிருந்தே இந்தப் பந்தம் தொடர்ந்து வருகிறது. அதனால்தான் அந்த மகிழ்ச்சியோடும், உரிமையோடும் உங்களையெல்லாம் சந்திக்க வருகை தந்துள்ளேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் ஏராளமான திட்டங்களை இஸ்லாமிய சமுதாய மக்களுக்குத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார்கள்.

மிலாது நபிக்கு அரசு விடுமுறை அறிவித்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அதே போல், இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு 3.5 சதவிகித உள் இடஒதுக்கீடு வழங்கியதும், கல்வி மற்றும் வேலைவாய்ப்பை அளித்து ஊக்கப்படுத்தியதும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். பணியாளர்கள் நல வாரியம், சிறுபான்மையினர் நல வாரியம், உருது பேசும் முஸ்லிம்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது, சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசினர் மகளிர் கல்லூரிக்கு ‘காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி’ என்று பெயர் சூட்டியது, கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டியது என டாக்டர் கலைஞர் அவர்கள் எண்ணற்ற திட்டங்களை உங்களுக்காகப் பார்த்துப் பார்த்துச் செய்துள்ளார்.

### ஹஜ் புனித பயணம்

சென்னை பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய ஆய்வு மையத்தை நிறுவியதும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். இப்படிப் பல்வேறு சாதனைகள், பல்வேறு திட்டங்கள். இன்று கலைஞர் வழியில் நம் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் இஸ்லாமிய மக்களின் நலனுக்காக ஏராளமான திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்கின்ற இஸ்லாமியர்களுக்காக `தமிழ்நாடு ஹஜ் இல்லம்’ கட்ட அடிக்கல் நாட்டியிருக்கிறார் நம் கழகத் தலைவர் அவர்கள். தொன்மையான பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்களைப் புனரமைப்பதற்காக 10 கோடி ரூபாய் அரசு நிதியை முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியுள்ளார்.

உலமாக்களின் ஓய்வூதியத்தை 3,000 ரூபாயிலிருந்து, பல ஆண்டுக்கால கோரிக்கையை ஏற்று 5,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தவர் நம் முதலமைச்சர் அவர்கள். சென்னை, மதுரையைப் போலவே இன்று கோவையிலும் ஒரு `வக்ஃபு தீர்ப்பாயம்’ அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். இப்படிச் சிறுபான்மையின மக்களுக்காக நம் திராவிட மாடல் அரசு செய்த திட்டங்களை இன்று முழுவதும் சொல்லிக்கொண்டே போகலாம். அதுமட்டுமல்லாமல், மக்களுக்குத் தேவையான அனைத்துத் திட்டங்கள். முதலமைச்சர் காலை உணவுத் திட்டம், மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்துத் திட்டம், 10 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம், மாணவர்களுக்கு ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம், மாணவிகளுக்கு ‘புதுமைப் பெண்’ திட்டம் எனப் பல்வேறு திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்.

### மகளிர் உரிமைத் தொகை

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, கடந்த பிப்ரவரி மாதம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ஒவ்வொரு மாதமும் கடந்த மூன்று ஆண்டாக ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு 1,000 ரூபாயை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வந்தார்கள். இன்று தேர்தலைக் காரணங்காட்டி, சில சங்கிக் கூட்டம் எப்படியாவது இந்தத் திட்டத்தை நிறுத்த வேண்டும் என்று முயற்சி செய்தனர். இதை அறிந்த நம்முடைய தலைவர் அவர்கள், இன்று 5,000 ரூபாயை, ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார். அதனால்தான் இன்று கழகக் கூட்டணியின் வலிமை ஒவ்வொரு நாளும் வளர்ந்துகொண்டே வருகிறது. ஆனால், அ.தி.மு.க கூட்டணியைப் பார்த்தால், பா.ஜ.கவால் மிரட்டிச் சேர்க்கப்பட்ட கட்சிகளைத் தவிர, வேறு யாரும் வந்து சேரவில்லை.

நேற்று பார்த்திருப்பீர்கள், மதுரையில் அ.தி.மு.க சார்பாக ஒரு மிகப் பெரிய பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். அந்தக் கூட்டத்தில் அ.தி.மு.கவினர் பெரியாரின் படத்தை வைத்திருந்தனர். தொலைக்காட்சியிலும் செய்திகளிலும் பார்த்திருப்பீர்கள், பெரியாரின் படத்தை அந்தக் கூட்ட முகப்பில் வைத்திருந்தனர். ஒன்றிய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் வருவதாக இருந்தது, வந்தார். வருவதற்கு முன்னால், பெரியாரின் படத்தை அங்கிருந்து எடுக்கச் சொன்னார்கள். அதையும் கேட்டு அடிமைக் கூட்டம் அங்கிருந்து எடுத்துவிட்டு, பா.ஜ.கவின் சின்னத்தை அங்கு வைத்துள்ளனர்.

அதனால்தான் நான் அடிக்கடி சொல்வதுண்டு. முரட்டுத் தொண்டர்களைப் பார்த்திருப்பீர்கள், முரட்டு பக்தர்களைப் பார்த்திருப்பீர்கள், இன்று இந்தியாவே ஒரு முரட்டு அடிமையை, தமிழ்நாட்டில் எடப்பாடி பழனிச்சாமியின் உருவத்தில் பார்த்துக்கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அ.தி.மு.கவின், ‘அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்’ என்ற பெயரில், அண்ணாவின் பெயரை எடுத்துவிட்டு அமித்ஷாவின் பெயரை வைக்கச் சொன்னாலும் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் உடனே செய்வார்.

### நீங்கள் சொல்லுங்கள்

நேற்று மதுரையில் பேசும்போது, ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள், ``நான் சில நாட்களுக்கு முன்பு இளைஞர் அணியின் மாநாட்டில் பேசும்போது சொன்னேன் எங்களையெல்லாம் அ.தி.மு.க மாதிரி நினைத்துக்கொண்டு மிரட்டப் பார்க்கிறீர்கள், சி.பி.ஐ , அமலாக்கத்துறை, வருமான வரித்துறைகளை வைத்து மிரட்டப் பார்க்கிறீர்கள், இங்கு ஈ.டி இல்லை மோடியைப் பார்த்தும் தி.மு.க கூட்டம் பயப்படாது” என்று பேசியிருந்தேன். நேற்று அதைக் குறிப்பிட்டு ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள், ``என்னைப் பார்த்து யாரும் பயப்பட வேண்டாம், பயப்படத்தக்க ஆள் நான் கிடையாது” என்று அந்தக் கூட்டத்தில் பேசினார்.

நான் சொல்வதெல்லாம், ஒன்றிய பிரதமர் அவர்கள் `பயப்பட வேண்டாம்’ என்று எங்களுக்குப் பதில் சொல்லத் தேவையில்லை. உங்களின் கூட்டத்தில், உங்களுக்குப் பின்னால் ஒரு கூட்டம் அமர்ந்திருக்கிறது, அந்தக் கூட்டத்திடம் `பயப்பட வேண்டாம்’ என்று நீங்கள் சொல்லுங்கள்.

எடப்பாடி பழனிச்சாமியின் சம்பந்தி மீது வழக்கு உள்ளது, அதைப் பார்த்துப் பயப்பட வேண்டாம் என்று சொல்லுங்கள். உங்களின் கூட்டணியில் பல பேரை மிரட்டி வைத்துள்ளீர்களே, அவர்களைப் பார்த்து பயப்பட வேண்டாம் என்று சொல்லுங்கள். தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கு எங்களின் தலைவர் இருக்கிறார், தி.மு.கவின் தொண்டர்கள் நாங்கள் இருக்கிறோம், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியாக நாங்கள் இருக்கிறோம்.

அண்ணன் ஜவாஹிருல்லா பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார், 2019இல் குடியுரிமைத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, அது இஸ்லாமிய சகோதரர்களுக்கும் சிறுபான்மையினருக்கும் எதிரான சட்டம் என்பதால், அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டதை நான் எப்பொழுதுமே பெருமையாகச் சொல்வேன். என்னுடைய பொது வாழ்க்கையில் நான் வந்து கலந்துகொண்ட முதல் போராட்டம் அந்த சி.ஏ.ஏ (CAA), என்.ஆர்.சி (NRC) சட்டத்தை எதிர்த்து நடந்த அந்தப் போராட்டம்தான். அண்ணன் ஜவாஹிருல்லா அவர்கள் ஒன்றைச் சொல்லத் தவறிவிட்டார்.

நான் பொது வாழ்க்கைக்கு வந்து முதன்முறையாகக் கைது செய்யப்பட்டதும் அந்த சி.ஏ.ஏ, என்.ஆர்.சி சட்டத்தைக் கிழித்து எறிந்து போராடியதற்காகத்தான். இதை என்னுடைய பொது வாழ்க்கையில் என்றைக்கும் பெருமையாகச் சொல்வேன்.

இங்கே வந்திருக்கக்கூடிய இஸ்லாமியப் பெருமக்கள் ஆழ்ந்து சிந்தித்து, நீங்கள் என்றைக்கும் தி.மு.க பக்கமே இருப்பீர்கள். வருகின்ற சட்டமன்றத் தேர்தலிலும் நீங்கள் நிச்சயம் நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம் நின்று, மீண்டும் நம்முடைய தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று இரண்டாவது முறையாக ஆட்சி அமைப்பதற்கு, வந்திருக்கக்கூடிய இஸ்லாமிய சமுதாய மக்கள் நீங்கள் என்றைக்கும் துணை நிற்க வேண்டும். நிற்பீர்கள் என்ற நம்பிக்கை என்றும் எனக்கு உண்டு.

வெல்வோம் 200, படைப்போம் வரலாறு!

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை வழங்கினார்

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும் சட்டமன்ற உறு ப்பினருமான ஜவாஹிருல்லா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மாநகர மேயர் பிரியா ராஜன், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக மாநிலச் செயலாளர் சிவகாசி முஸ்தாபி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் ஷேக் அப்துல்லா, தமிழன் பிரசன்னா, நரேந்திரன், பக்கீர் பாய், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஜி.எம்.தேவன், ஆசாத், அருட்தந்தை சுந்தர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் விஜயகுமார், பகுதி கழகச் செயலாளர்கள் ராஜசேகர், முரளி, இப்ராஹிம் கனி, கலைச்செல்வி, போஸ், மண்டல குழுத் தலைவர் ஸ்ரீராமுலு, பி.கே.மூர்த்தி, மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் பரிமளம், வட்டக் கழகச் செயலாளர்கள் ராஜா (எ) கதிரவன், பரத்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், துணை அமைப்பாளர்கள் ஜெகதீஷ், வினோத், பாலமுருகன், தனசேகர், பிரபு, சங்கர் நானா, ராகீப் உசேன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.





விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் வில்லிபத்திரி ஊராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ. 61 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய சமுதாயக் கூடம் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தினை மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷ், பொன்ராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் மாரிமுத்து, கிளை கழக செயலாளர் வெள்ளைச்சாமி பாண்டியன், BDA S. அழகுரஞ்சிதம் ஆகியோர் இருந்தனர்.



விழுப்புரம் மாவட்டம் நெடுஞ்சாலைத் துறை சார்பில் முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஆற்காடு விழுப்புரம் சாலையில் 79 / 140 முதல் 92/610 வரை கடின புருவத்துடன் கூடிய இருவழிச் சாலையை 85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் பணிக்கு செஞ்சி அடுத்த விநாயகபுரம் அருகில் அடிக்கல் நாட்டு விழா விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ., கலந்துகொண்டு பணியை தொடங்கி வைத்தார். உடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆரணி எம்.எஸ்.தரணிவேந்தன், திருவண்ணாமலை அண்ணாதுரை,நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர் செந்தில்குமார், கோட்ட பொறியாளர் உத்தண்டி,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச் செல்வன், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், பச்சையப்பன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.